மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! டி.மோகன்தாஸ் வரவேற்புரை! இடைக்கழிநாடு பேரூராட்சி மன்ற உறுப்பினர்

# பொறியாளர் பெ.பிரபு (எ) ஜெயலட்சுமணன் இல்ல விழா!

## ஆ.இராசா எம்.பி. – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் – அன்பகம் கலை வாழ்த்துரை!

காஞ்சிபுரம், மே 8-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இடைக்கழி நாடு பேரூராட்சி மன்ற உறுப்பினர் கப்பிவாக்கம் பொறியாளர் பெ.பிரபு (எ) ஜெயலட்சுமணன் - பெ.ஜெ. உமாமகேஸ்வரி ஆகியோரின் குழந்தைகள் ஜெ.தமிழிலக்கியன் (எ) ரித்தேஷ், ஜெ.தமிழமுதன் (எ) யுவனேஷ் ஆகியோருக்கு காதணி விழா 14.5.2026 - வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் கப்பிவாக்கம் ஸ்ரீ பெரியாண்டவர் திருக்கோயில் நடைபெறுகிறது.

அதைத் தொடர்ந்து மதியம் 12 மணியளவில் (ECR) கிழக்கு கடற்கரை சாலை, தேன்பாக்கம் ஸ்ரீசாய்ராம் ஏ.சி.மஹாலில் விருந்து உபசரிப்பு நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

பேரூர்க் கழகச் செயலாளர் டி.மோகன்தாஸ், முன்னாள் மன்ற உறுப்பினர் வைஜெயந்தி மோகன்தாஸ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

சு.சக்திவேல், எம். அருணா, ஆர்.ரஞ்சித்குமார், சாந்தி முருகேசன், ஆர்.சசிகுமார், எஸ்.பக்தவச்சலம், எம்.எச்.பக்ருதீன் அலி அகமது, கே.எஸ்.ஜெயராமன், ஜி.வி.பெருமாள், இரஞ்சன் (எ) வஜ்ரவேலு, எஸ்.தட்சணாமூர்த்தி ஆகியோர் முன் னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் கழக துணை பொதுச் செயலாளர் - முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ. இராசா, அமைச்சர் - மண்டலப் பொறுப்பாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கழக அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழக துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி, க.செல்வம் எம்.பி., கழக துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டின், சி.வி.எம்.பி.எழிலரசன், பனையூர் மு. பாபு, நித்யா சுகுமார், சிந்தனை செல்வன், எஸ்.அமுலு பொன்மலர், ச.இனியரசு, டாக்டர் ஆர்.டி.அரசு, ப.அப்துல் மாலிக், கண்ணிகை ஜி.ஸ்டாலின் ஆகியோர் பங்கேற்று குழந்தைகளை வாழ்த்துகின்றனர்.

மேலும் இவ்விழவில் ஏழுமலை, எ.சிற்றரசு, எ.சரவணன், எம்.எஸ். பாபு, கே.எஸ்.ஆர். கார்த்திகேயன், கே.குமார், ஜி. குமார், பி.எச்.சத்யசாய். பொண்.சிவக்குமார், வெளிக்காடு வெ.ஏழுமலை, டி.வி.கோகுலக்கண்ணன், கே.ஞானசேகரன், எஸ்.டி. பிரேமசந்த், ஆர்.தசரதன், ஏ.யுவராஜ், எல். எஸ்.ரவீந்திரநாத், ஏ. என்.பாரத், மு.குணசேகரன், கே.நாகராஜ், ஜே.சங்கர், செம்பருத்தி துர்கேஷ், சாந்திராமச்சந்திரன், சம்யுக்தா ஐய்யனார், ஆர்த்தி செல்வகுமார், வி.முனுசாமி, சி.தயாளன், என்.ராஜ்குமார், பெ.பாக்கியராஜ், பா. கோட்டீஸ்வரி, எஸ்.இளையராஜா, புவனேஸ்வரி, வேலு, ஏ.சங்கர், கே.பத்மநாபன், ஏ.மணிவண்ணன், எம்.நாகூர்மீரான், இளவரசி சரவணன், பரமேஸ்வரி, சங்கர லிங்கம், சுசிலா, ஆறுமுகம் புவனேஸ்வரி முருகதாசன், என்.தமிழரசன் விசாலாட்சி, லோகு, மோனிஷா சகாதேவன், கே.அருண்பாபு, வஜனா பாஸ்கரன், சாந்தி ரவிக்குமார், ஜெயலட்சுமி மகேந்திரன், கலாவதி, நாகமுத்து, பிரேமா சங்கர், சித்ரா ராஜேந்திரன் உள்ளிட்ட கழகத்தினர் பலர் பங்கேற்கின்றனர்.

பேரூர் மாணவர் அணி துணை அமைப்பாளர் எஸ்.பாஸ்கரன் நன்றி கூறுகிறார்.

---

தமிழகம் முழுவதும் உள்ள

# அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் சேர 29ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்!

## கல்லூரிக் கல்வி ஆணையர் தகவல்!

சென்னை, மே 8-

தமிழகம் முழுவதும் உள்ள 181 அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் சேர 29ஆம் தேதி வரை மாணவர்கள் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். இது தொடர்பாக கல்லூரிக் கல்வி ஆணையர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்ப தாவது:

அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் 2026-27ம் கல்வி ஆண்டில் இளங்கலை பட்டப் படிப்பு முதலாம் ஆண்டில் சேர மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்கு www.tngasa.in என்ற இணையதளத்தில் 29ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்.

இணையதள வசதி இல்லாத மாணவர்கள் விண்ணப்பிக்க ஏதுவாக, அனைத்து அரசு கலை, அறிவியல் கல்லூரிகளிலும் சேர்க்கை உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் ரூ.50. எஸ்சி, எஸ்டி மாணவர்கள் விண்ணப்பக் கட்டணம் (ரூ.48) செலுத்த தேவையில்லை. பதிவுக் கட்டணம் ரூ.2 மட்டும் செலுத்தினால் போதும். கட்டணங்களை டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு, நெட் பேங்கிங், யுபிஐ மூலம் ஆன்லைனில் செலுத்தலாம்.

தமிழகம் முழுவதும் மொத்தம் உள்ள 181 அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் 159 பாடப் பிரிவுகளில் 1.27 லட்சம் இடங்கள் உள்ளன. மாணவர்கள் தாங்கள் விரும்பும் கல்லூரியில் விருப்பப்பட்ட பாடப் பிரிவுகளுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள 181 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 159 வகையான படிப்புகளில் மொத்தம் 1,26,959 இடங்கள் உள்ளன. இதில், முதலாம் சுழற்சியில் 1,01,022 இடங்களும், இரண்டாம் சுழற்சியில் 25,937 இடங்களும் சேர்க்கப்பட உள்ளன. ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், 04424343100 / 04424342011 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

---

பெண்களுக்கு எதிரான குற்றங்களில்

# தலைநகர் டெல்லி முதலிடமும், மும்பை இரண்டாவது இடமும் பெற்றுள்ளது!

## தேசிய குற்ற ஆவண அறிக்கையில் தகவல்!

புதுடெல்லி, மே 8-

2024 ஆம் ஆண்டுக்கான தேசிய குற்ற ஆவண அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் பெண்களுக்கு எதிரான குற்ற வழக்கு களில் பெரு நகரங்கள் வரிசையில் தலைநகர் டெல்லி முதல் இடத்தில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக 2 லட்சத்து 75 ஆயிரம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டதில், 13 ஆயிரத்து 400 வழக்குகள் பெண்கள் தொடர்பான குற்ற வழக்குகள் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகளில் மும்பை இரண்டாவது இடம் பிடித்துள்ளது.

மேலும், நாடு முழுவதும் கடந்த 2024 ஆம் ஆண்டில் 98 ஆயிரத்து 375 சிறுவர்கள் காணாமல் போயுள்ளதாகவும் இது முந்தைய ஆண்டைவிட 8 சதவீதம் அதிகம் என்றும் தேசிய குற்ற ஆவண அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது., குழந்தைகளுக்கு எதிரான குற்ற வழக்குகள் ஒரு லட்சத்து 87 ஆயிரமாக உயர்ந்துள்ளதாகவும், சைபர் குற்றங்கள் 18 சதவீதம் அதிகரித்து ஒரு லட்சத்து ஆயிரத்து 928 வழக்குகள் பதிவாகி உள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதார குற்றங்கள் 4.6% அதிகரித்துள்ளதாகவும், 2 லட்சத்து 14 ஆயிரம் பொருளாதார குற்ற வழக்குகள் பதிவாகியுள்ளதாகவும், தேசிய குற்ற ஆவண அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# ஊட்டியில் 138வது நாய் கண்காட்சி இன்று துவக்கம்!

## 55 வகைகள் கொண்ட 435 நாய்கள் பங்கேற்பு!

ஊட்டி, மே 8-

138வது நாய்கள் கண்காட்சி இன்று (8ம் தேதி) துவங்கி 3 நாட்கள் ஊட்டியில் உள்ள அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் நடக்கிறது. நீலகிரி மாவட்டம் ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விப்பதற்காக ஆண்டுதோறும் கோடை விடுமுறையின் போது தோட்டக்கலைத் துறை மற்றும் சுற்றுலாத் துறை மூலம் பல்வேறு கண்காட்சிகள் மற்றும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசு சார்பில் மலர் கண்காட்சி, ரோஜா, பழம், காய்கறி மற்றும் வாசனை திரவிய கண்காட்சி நடத்தப்படுகிறது.

இதுதவிர, படகு போட்டி, படகு அலங்கார போட்டி ஆகியவை நடத்தப்படுகிறது.

இவற்றை கண்டு சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைகின்றனர். அதே சமயம் சில தனியார் அமைப்புகள் சார்பிலும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்க பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. நாய் கண்காட்சி உட்பட பல்வேறு நிகழ்ச்சிகளும் ஊட்டியில் நடத்தப்படுகிறது.

குறிப்பாக, ஆண்டுதோறும் சவுத் இந்தியன் கேனல் கிளப் சார்பில் நாய்கள் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு நாளை (8ம் தேதி) துவங்கி மூன்று நாட்கள் நாய் கண்காட்சி நடக்கிறது. 8ம் தேதி கீழ் படிதல் போட்டிகள் நடத்தப்படுகின்றன. 9 மற்றும் 10 ஆகிய இரு நாட்கள் பல்வேறு வகையான நாய்களின் அணிவகுப்பு மற்றும் கண்காட்சி நடத்தப்படுகிறது. இப்போட்டியில் பல்வேறு நாடுகள் மற்றும் மாநிலங்களை சேர்ந்த 435 நாய்கள் பங்கேற்கின்றன.

காமன் அவுண்ட், சிப்பி பாறை, கோம்பை, கன்னி, மதுல் அவுண்ட், பாஸ்னி, ராஜபாளையம், ராம்பூர் அவுண்ட் உட்பட 55 வகைகளை கொண்ட நாய்கள் பங்கேற்கிறது.

மேலும், இந்த ஆண்டு புதிதாக ஆஸ்திரேலியாவை சேர்ந்த செப்பர்க், பிரேசில் நாட்டை சேர்ந்த பெராட்டி பிரஸ்சினரியோ ஆகிய இரு நாய் வகைகள் இந்த கண்காட்சியில் பங்கேற்கின்றன. இப்போட்டிகளில் ஆஸ்திரேலியா, கசக்கிஸ்தான், அசர்பெசான் ஆகிய நாடுகளை சேர்ந்த நடுவர்கள் கலந்துகொள்கின்றனர் என சவுத் இந்தியன் கேனல் கிளப் தலைவர் ரஜனி கிருஷ்ணமூர்த்தி மற்றும் செயலாளர் மோத்தேஷ் ஆகியோர் தெரிவித்தனர்.

---

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் சுற்று வட்டாரப்பகுதிகளில்

# மின் கம்பங்கள் விழுந்து வீடுகள் சேதம்!

நத்தம், மே 8-

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் செவ்வாயன்று இரவு பலத்த மழை பெய்தது. இதில் நத்தம் அருகே அய்யாபட்டியைச் சேர்ந்த சித்திரையன் (40) என்பவரின் வீட்டின் முன்பு போடப்பட்டி ருந்த ஆஸ்பெட்டாஸ் சீட் மீது அப்பகுதியில் பெய்த பலத்த மழையின் காரணமாக வீட்டின் அருகில் இருந்த மின் கம்பம் சாய்ந்து விழுந்தது. இதில் ஆஸ்பெட்டாஸ் சீட் முழு வதும் சேதமடைந்தது.

மேலும் அந்த சமயத்தில் அங்கு யாரும் இல்லாததால் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது. இது குறித்து தகவல் அறிந்த நத்தம் கிராம நிர்வாக அலுவலர் ராஜேஷ்குமார் சம்பவ இடத்திற்கு சென்று நேரில் விசாரணை நடத்தி னார். இதைப் போலவே வேலம்பட்டி பகுதியில் பெய்த மழையால் அப்பகுதியைச் சேர்ந்த தினகரன்(30) என்பவரின் மாட்டுக் கொட்டகையில் போடப்பட்டிருந்த செட்டிலும் மின்கம்பம் சாய்ந்தது. இதில் செட் சேதமடைந்தது. இது குறித்து தகவல் அறிந்து வந்த மின்வாரியத்தினர் சாய்ந்த மின் கம்பங்களை அப்புறப்படுத்தினர்.

---

பஞ்சாப்பில் அடுத்தடுத்து

# 2 இடங்களில் குண்டுவெடிப்பு - பொதுமக்கள் அச்சம்!

பஞ்சாப், மே 8-

பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் உள்ள எல்லைப் பாதுகாப்புப் படை தலைமையகத்தின் நுழைவுவாயில் அருகே நேற்று இரவு பலத்த சத்தத்துடன் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது.

அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஸ்கூட்டர் ஒன்று திடீரென வெடித்துச் சிதறியதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது

ஆன்லைன் பொருட்கள் விநியோக நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர், எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்களுக்குப் பார்சல்களை வழங்க வந்தபோது இந்த சம்பவம் நடந்ததாக தெரிகிறது.

இந்த சம்பவத்தின்போது அங்கு பணியில் இருக்கும் ஒருவருக்குச் சொந்தமான ஸ்கூட்டர் தீப்பிடித்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்தது.

ஒரு பார்சலைக் கொடுத்துவிட்டு அவர் தனது ஸ்கூட்டருக்குத் திரும்பியபோது, ஓர் வெடிப்பு நிகழ்ந்து, அவரது வாகனம் சிதறியதுடன், அருகில் இருந்த சில மின் கம்பங்களையும் சேதப்படுத்தியது. இதில் ஒரு சிறுவனுக்கும் லேசான காயங்கள் ஏற்பட்டன. இருப்பினும் இதன் பின்னணியில் ஏதேனும் சதி உள்ளதா என்பது குறித்து அனைத்து கோணங்களிலும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது இந்தச் சம்பவம் ஓய்வதற்குள், இரவு 10:30 மணியளவில் அமிர்தசரசின் காசா பகுதியில் உள்ள ராணுவ முகாம் அருகே மற்றொரு குண்டு வெடிப்பு நிகழ்ந்தது இதனால் முகாமின் வெளிச்சுவரில் இருந்த ஒரு தகரக் கொட்டகை சேதமடைந்தது.

இது அப்பகுதி முழுவதும் பீதியை ஏற்படுத்தியது. மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே ஓடினர்.

இந்த வெடிப்பின் சத்தம் சுமார் ஒன்றரை கிலோமீட்டர் தொலைவு வரை கேட்டதாகவும் ராணுவ வளாகத்தின் சுவர்கள் அதிரும் அளவிற்கு அதன் தீவிரம் இருந்ததாகவும் உள்ளூர் மக்கள் அச்சத்துடன் தெரிவித்தனர் 2 இடங்களிலும் பாதுகாப்பு படையினர் அப்பகுதியைச் சுற்றி வளைத்துள்ளதுடன் விசாரணையும் நடைபெற்று வருகிறது வெடிகுண்டு அகற்றும் குழு மற்றும் தடயவியல் குழுவினர், ஆய்வுக்காக இடங்களில் இருந்து மாதிரிகளைச் சேகரித்தனர்.

---

# நீர்வரத்து முற்றிலும் நின்று வறண்டு காணப்படும் சுருளி அருவி!

## சுற்றுலா பயணிகள் ஏமாற்றம்!

தேனி, மே 8-

தேனி மாவட்டம் கம்பம் அருகே உள்ள சுருளி அருவியானது, கோடை மழை குறைவால் வறண்ட நிலையில் காணப்படுவதால் சுற்றுலா பயணிகள் மிகுந்த ஏமாற்றம் அடைந்து உள்ளனர். மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் மழை பொழிவு இல்லாததன் காரணமாக கடந்த சில மாதங்களாக சுருளி அருவிக்கு போதுமான நீர்வரத்து இல்லை. இதனால் இங்கு வரும் சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர்.

இந்த நிலையில் 2 நாட்களுக்கு முன் சுருளி அருவியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான அரிசிப்பாறை, வெண்ணியாறு மற்றும் தூவானம் அணை பகுதிகளில் பெய்த மழையால், சுருளி அருவிக்கு தற்காலிகமாக தண்ணீர் வந்ததால் சுற்றுலாப் பயணிகள் குளித்து மகிழ்ந்தனர்.

ஆனால் தற்போது மழை இல்லாத காரணத்தால் சுருளி அருவிக்கான நீர்வரத்து முற்றிலும் நின்று, பாறைகள் மட்டுமே காணப்படுகின்றன. போதுமான மழை இல்லாததாலும், கடும் வெயில் காரணமாகவும் நீர்வரத்து அடியோடு நின்றுள்ளது. இதனால் கோடை விடுமுறையில் உற்சாகமாக அருவியில் குளிக்கலாம் என்று சுருளி அருவிக்கு கேரளா மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வரும் சுற்றுலா பயணிகள், பெருத்த ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர்.

அதுமட்டுமின்றி சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்ததால், இப்பகுதியை நம்பியுள்ள உள்ளூர் வியாபாரிகளின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் தங்கள் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்க வரும் பொதுமக்களும் சுருளி அருவி பகுதியில் தண்ணீர் இல்லாததால் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

சுருளி அருவியில் தண்ணீர் இல்லாத காரணத்தால் சுற்றுலா பயணிகள் அருகிலுள்ள கும்பக்கரை அருவி போன்ற இடங்களுக்குச் செல்ல திட்டமிடுகிறார்கள். முன்னதாக, சில சமயங்களில் கனமழை காரணமாக நீர்வரத்து அதிகரித்து சுருளி அருவியில் குளிக்கத் தடை விதிக்கப்பட்டதும் உண்டு. ஆனால் தற்போதைய சூழலில் வறட்சியால் அருவி பொலிவிழந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

---

# ரஷ்ய கல்லூரிகளில் சேர வழிகாட்டி கல்வி கண்காட்சி!

## சென்னை, மதுரை, கோவையில் நடைபெறுகிறது !

சென்னை, மே 8-

ரஷ்யாவில் உள்ள கல்லூரிகளில் சேருவதற்கான வழிகாட்டி கல்வி கண்காட்சி, சென்னை, மதுரை, திருச்சி, சேலம், கோவை ஆகிய நகரங்களில் இம்மாதம் நடைபெறுகிறது.

இதுதொடர்பாக, தென்னிந்தியாவுக்கான ரஷ்ய துணை தூதர் வலேரி கோட்ஜாவ், சென்னையில் உள்ள ரஷ்ய துணை தூதரும், ரஷ்ய அறிவியல் மற்றும் கலாச்சார மையத்தின் இயக்குநருமான அலெக்சாண்டர் டோடோனோவ் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ரஷ்ய தூதரகம் மற்றும் ரஷ்ய அறிவியல், கலாச்சர மையம் சார்பில், ரஷ்யாவில் உயர்கல்வியில் சேருவது தொடர்பான வழிகாட்டி கல்வி கண்காட்சி ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில், இந்த ஆண்டும் ரஷ்ய கல்வி கண்காட்சி சென்னையில் மே 9 மற்றும் 10 ம் தேதியும், மதுரையில் மே 12ம் தேதியும், திருச்சியில் மே 13ம் தேதியும் சேலத்தில் மே 14ம் தேதியும், கோவையில் மே 15ம் தேதி நடைபெற உள்ளது. சென்னையில் ஆழ்வார்பேட்டையில் உள்ள ரஷ்ய அறிவியல் மற்றும் கலாச்சார மையத்தில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி கண்காட்சி நடைபெறுகிறது.

சென்னை மற்றும் இதர நகரங்களில் நடைபெற உள்ள இந்த கல்வி கண்காட்சியில் ரஷ்யாவைச் சேர்ந்த 60 பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்கள் கலந்து கொள்கின்றன. பொறியியல்,மருத்துவ படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள் கண்காட்சியில் பங்கேற்கலாம். ரஷ்யாவில் கல்வி பயில ரஷ்ய அரசும், பல்கலைக்கழகங்களும் பல்வேறு கல்வி உதவித் தொகைகளை வழங்குகின்றன.

குறைந்த கட்டணம்: தற்போது, ரஷ்யாவில் சுமார் 3.5 லட்சம் வெளிநாட்டு மாணவர்கள் உயர்கல்வி பயில்கின்றனர். இந்த எண்ணிக்கை 2023ம் ஆண்டுக்குள் 5 லட்சமாக உயர்த்த ரஷ்ய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. ரஷ்ய கல்வி நிறுவனங்களில் நவீன உள்கட்டமைப்பு வசதிகளுடன் உலக தரத்திலான கல்வி குறைந்த கட்டணத்தில் வழங்கப்படுகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

கண்காட்சி ஒருங்கிணைப்பாளரும், ஸ்டடி அப்ராட் எஜுகேஷனல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருமான ரவிச்சந்திரன் கூறும்போது, "ரஷ்ய மருத்துவ கல்லூரிகளில் குறைந்த கல்வி கட்டணத்தில் எம்பிபிஎஸ் படிக்கலாம். கல்வி உதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

தமிழ்வழியில் படித்தவர்கள் எம்.பி.பி.எஸ். படிப்பில் சேர விரும்பும் மாணவர்கள் அறிவியல் பாடங்களில் குறைந்தபட்சம் 50 சதவீத மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். எஸ்சி, எஸ்டி, ஓபிசி வகுப்பினர் எனில், 40 சதவீத மதிப்பெண் போதும். 'நீட்' தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டியது அவசியம். தமிழ்வழியில் படித்த மாணவர்களும் சேரலாம். ரஷ்ய பல்கலைக் கழகங்களில் உயர் கல்வி பயில சிஇடி, ஐஇஎல்டிஎஸ் போன்ற தகுதித் தேர்வுகள் எதுவும் தேவையில்லை" என்றார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.சி.விஜயன்

**மே 8 (2021)**



இளமைக் காலம் முதலே கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.

திருவொற்றியூர் நகரச் செயலாளராக பத்தாண்டுகளும், ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட துணைச் செயலாளராகவும் கழகத்தில் பொறுப்பு வகித்தவர்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்துகொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.